முதல்வருக்கு வீரவாள் பரிசு

கோவைக்கு வருகை தந்த முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு,அமைச்சர் செந்தில் பாலாஜி வெள்ளி வீரவாள் வழங்கினார்.அருகில் மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக்,தொண்டாமுத்தூர் அ.ரவி,தளபதி முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

குளங்களில் தீவு திடலை முடக்கிய முட்புதர்கள்

கோவை, நவ.7: கோவை உக்கடம் பெரியகுளத்தில் ரோசி பெலிக்கன், சாரஸ் கிரே, ஓபன் பில்டு பெலிக்கன், மீடியன் எக்ரட், கேட்டல் எக்ரட், லார்ட் கார்மோரண்ட், நைட் ஹீரோயின், பர்பின் ஹீரோயின், ஸ்பூன் பில், ஐபிஸ், ஸ்பாட் பில்டு டக் உள்ளிட்ட 30க்கும் வகையான நீர் பறவைகள் வசித்து வந்தன. இந்த பறவைகள், குளங்களில் மரங்களில் கூடு கட்டி முட்டையிட்டு குஞ்சு பொரித்து தங்கியிருந்தன. உக்கடம் பெரிய குளத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் 32 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடந்தது. வாலாங்குளத்தில் 27 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடத்தப்பட்டது. குளக்கரையில் மண் சமன் செய்து அதில் கான்கிரீட் தளம், வடிகால் உருவாக்கப்பட்டது. பறவைகள் வசிக்க குளங்களின் மையத்தில் தீவு திடல் என்ற மண் மேடு உருவாக்கப்பட்டது. இதில் பல வகை மரக்கன்றுகள் நடப்பட்டது. ஆனால் மரக்கன்றுகள் வளராமல் முட்புதர்கள் மட்டுமே வளர்ந்து கிடக்கிறது. இந்த தீவு திடல் பறவைகள், நீர்வாத்துக்கள் வாழ இருப்பிடமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வாத்துக்கள், கொக்கு இனங்களில் இந்த தீவு திடல் புதரில் வாழ போதுமான வழிவகை இல்லாத சூழல் ஏற்பட்டிருக்கிறது. சில வகை பறவைகள் குளக்கரையில் தான் வசிக்கின்றன. தீவு திடலை மேம்படுத்தி நீர் வாழ் பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும் என சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மணமக்களுக்கு வாழ்த்து

கோவை வடவள்ளி பகுதி திமுக செயலாளரும், முன்னாள் பேரூராட்சி தலைவருமான வ.ம.சண்முகசுந்தரம்-அமிர்தவல்லி ஆகியோரது மகன் சிபி- ஹரி பிரியா திருமணம் சமீபத்தில் நடந்தது. கோவைக்கு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் மணமக்களை வாழ்த்தினார். அருகில் அமைச்சர் செந்தில் பாலாஜி உள்ளார்.

அரசு உதவிபெறும் கல்லூரிகளில்

காலிப்பணியிடம் நிரப்ப வேண்டும்

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்தல்

கோவை, நவ. 7: கோவை மண்டலத்தில் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் 7வது மண்டலம் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து சங்கத்தின் தலைவர் அன்பரசு மற்றும் செயலாளர் சரவணக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோவை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் கலைச்செல்வி, தமிழ்நாடு அரசின் மாணவர்களுக்கான சிறந்த திட்டங்களான நான் முதல்வன், புதுமை பெண், தமிழ் புதல்வன் திட்டங்களை கோவை மண்டல கல்லூரிகளில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் முழுமையாக அமல்படுத்தியுள்ளார்.

மாணவர்களின் வாழ்வாதாரம் மற்றும் முன்னேற்றத்திற்காக கல்விக்கடன் முகாம் மற்றும் வேலை வாய்ப்பு முகாம் ஆகியவற்றை சிறப்பான முறையில் நடத்திக்கொண்டு இருக்கிறார். அரசு உதவி பெறும் ஆசிரியர்களின் பணி மேம்பாட்டு நிலுவை தொகையை உடனடியாக பெற்றுத்தர வேண்டும். கல்லூரி நிர்வாகங்களின் சங்க உறுப்பினர்களின் மீதான பழிவாங்கும் நடவடிக்கைகளை களைய வேண்டும். அரசு உதவிபெறும் கல்லூரிகளில் காலியாக உள்ள பணி இடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு உதவிபெறும் கல்லூரி நிர்வாகங்கள் அரசு ஆணைகளை முழுமையாக அமல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசு உதவிபெறும் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை உரிய முறையை பின்பற்றி நடைபெறுகிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையான எம்.பில் மற்றும் பிஎச்டி பட்டபடிப்பிற்கு ஊக்கத்தொகையை பெற்றுத்தர வேண்டும் என கோவை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் கலைச்செல்வியை கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவ ஆள் சேர்ப்பு முகாமில் சலசலப்பு

மைதானத்திற்குள் சுவர் ஏறி குதிக்க முயன்ற இளைஞர்கள் விரட்டியடிப்பு

கோவை, நவ. 7: இந்திய ராணுவத்தில் 174 ராணுவ வீரர்கள், 50 கிளார்க்குகள் பணியிடங்களை நிரப்புவதற்காக ஆள் சேர்ப்பு முகாம் கடந்த 4-ந் தேதி கோவை பிஆர்எஸ் வளாகத்தில் தொடங்கியது, வருகிற 16-ந் தேதி வரை நடைபெற உள்ளது. தமிழ்நாடு மட்டுமின்றி வெளி மாநில இளைஞர்களும் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்றனர்.

நேற்று ராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு நடைபெற்றது. இரு மாநிலங்களில் இருந்து 8 ஆயிரம் இளைஞர்கள் குவிந்தனர். நேற்று முன்தினம் காலையில் இருந்தே கோவைக்கு வரத் தொடங்கினர். சாலை ஓரம் மற்றும் பல்வேறு இடங்களில் தங்கி இருந்தனர்.

முகாம் நடைபெறும் மைதானத்துக்கு நேற்று காலை 5 மணிக்கு சென்றனர். ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், கம்பி மீது நடத்தல், உயரம் சரிபார்த்தல் போன்ற தேர்வுகள் நடத்தப்பட்டன. அப்போது போதிய சான்றிதழ் இல்லை என கூறி அங்கிருந்து சில இளைஞர்களை அதிகாரிகள் நிராகரித்ததாக தெரிகிறது. இதனால் ஆத்திரமடைந்த இளைஞர்கள் சிலர் மைதானத்தின் சுற்றுச்சுவர் மீது ஏறி குதித்து மீண்டும் உள்ளே நுழைய முயன்றனர்.

சிலர் மெயின் கேட் வழியாக மீண்டும் உள்ளே செல்ல முயன்றனர். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை தடுத்தனர். ஒரே நேரத்தில் சுமார் 200க்கும் மேற்பட்டோர் உள்ளே நுழைய முயன்றதால் அங்கு பரபரப்பு நிலவியது.

மேற்கொண்டு அங்கு கூடுதல் போலீசார் குவிக்கப்பட்டனர். உள்ளே நுழைய முயன்ற இளைஞர்களை போலீசார் விரட்டியடித்தனர். இதையடுத்து அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இன்று (வியாழக்கிழமை) தமிழகத்தில் உள்ள அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, ராணிப்பேட்டை, தஞ்சாவூர், திருப்பத்தூர், திருவாரூர், திருவள்ளூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த இளைஞர்களுக்கு நடைபெறுகிறது.

கோவையில் நேற்று ராணுவத்தில் சேர்வதற்காக வந்த இளைஞர்கள் தேவையான சான்றிதழ்கள் கொண்டு வராத நிலையில்,தேர்வில் இருந்து வெளியேற்றப்பட்டனர். நிராகரிக்கப்பட்ட இளைஞர்கள் சுவர் ஏறி குதித்து மீண்டும் தேர்வில் பங்கேற்க முயன்ற போது போலீசாரால் விரட்டி அடிக்கப்பட்டனர்.

சிறார்கள் துன்புறுத்தல் தடுக்க கண்காணிப்பு

கோவை, நவ.7: கோவை மாவட்டத்தில் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் குழந்தைகள் பாதுகாப்பு கமிட்டியினர் சிறார் துன்புறுத்தப்படுவதை தவிர்க்க கண்காணிப்பு பணி நடக்கிறது.

உள்ளாட்சி அமைப்பினர், வருவாய்த்துறையினர், பொதுப்பணி அதிகாரி, தொழிலாளர் நல அலுவலர், சைல்டு லைன், ரயில்வே, பள்ளி தலைமை ஆசிரியர், சுய உதவி குழு, ஐ.சி.டி.எஸ் அலுவலர் என பல்வேறு துறையினர் மூலமாக கமிட்டி அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணி நடக்கிறது. சிறார்கள் எந்த பகுதியிலாவது துன்புறுத்தப்படுகிறார்களா, பாலியல் ரீதியான துன்புறுத்தல் இருக்கிறதா என கண்டறிய இந்த குழுவினர் ஆய்வு நடத்தி வருகிறார்கள். இந்த கமிட்டி மூலமாக சிறார்கள் துன்புறுத்தப்படுவதை தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. படிக்கும் வயதில் உள்ளவர்கள் வேலைக்கு செல்கிறார்களா, அவர்களின் வசிப்பிடம், சுற்றுப் பகுதியில் அவர்களுக்கு தொந்தரவு இருக்கிறதா, சிறார்களின் மீது தாக்குதல் நடத்தப்படுகிறதா, வீட்டு வேலைகளில் சிறார் ஈடுபடுத்தப்படுகிறார்களா, பாலியல் ரீதியான பாதிப்பில் இருக்கிறார்களா, குழந்தைகள் காணாமல் போயிருக்கிறார்களா, குழந்தை திருமணம் நடந்ததா என இந்த கமிட்டியினர் கண்காணித்து வருகிறார்கள். சிறார்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நபர்கள், குழந்தை திருமணம், பாலியல் அத்துமீறல் நபர்கள் மீது போலீசில் புகார் அளித்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேதகு 2-வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோயமுத்தூர்

அ.வ.எண். 303 / 2024

ராமாத்தாள்
W/o.கருப்புசாமி,
கதவு எண்.4/68, N.G.R.வீதி,
செம்மேடு அஞ்சல்,
கோயம்புத்தூர்-641 114. ...வாதி

-எதிர்-

1. வட்டாட்சியர் அவர்கள் பேரூர் தாலுக்கா, கோவை மாவட்டம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கோவை மாவட்டம் ...பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி வாதி கூறுந்த 09.10.2021 அன்று கதவு எண்.4/68, N.G.R.வீதி, செம்மேடு (அஞ்சல்), கோயமுத்தூர்-641114 என்ற முகவரியில் காலமான K.சங்கர்கணேஷ் என்பவருக்கு நான் தான் வாரிசு என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கும் மேற்படி அசல் வழக்கானது 17.12.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளில் ஆட்சேபனை இருப்பவர்கள் மேற்படி தேதியில் காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனைகளை தெரிவித்துக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு ஆட்சேபனை இல்லை என்று ஏற்றுக் கொள்ளப்படும்.

S.செந்தில்குமார், M.B.A.,L.LB.,
N.நந்தினி,ML.,
வாதி வழக்கறிஞர்கள்,
கோயம்புத்தூர்.
செல்-9865029995

நினைவு பரிசு வழங்கல்

கோவை காந்திபுரத்தில் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கலெக்டர் கிராந்திக்குமார் பாடி நினைவு பரிசு வழங்கினார்.

பழைய சாப்ட்வேர்களால் காலவிரயம்

பி.எப் அலுவலகங்கள் நவீனமாகுமா?

சந்தாதாரர்கள் கோரிக்கை

ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு, 2022-2023ம் ஆண்டு கணக்கீட்டின் படி நாடு முழுவதும் 29.88 கோடி கணக்குகளை பராமரிக்கிறது. 1952ல் இயற்றப்பட்ட வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர விதிகள் சட்டமானது, தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வருங்கால வைப்பு நிதி பிடிப்பதை கட்டாயமாக்கியது. இச்சட்டப்படி இயங்கும் மத்திய அறங்காவலர் குழு, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி திட்டம், சந்தாதாரர்களுக்கான ஓய்வூதிய திட்டம் மற்றும் வைப்பு தொகையுடன் இணைந்த காப்பீடு திட்டம் என மூன்று திட்டங்களை நிர்வகிக்கிறது. 1971ல் குடும்ப ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தபட்டு, 1995க்கு பின் அத்திட்டம், சந்தாதாரர்களுக்கான ஓய்வூதிய திட்டமாக மாறியது.

இதன்படி, தனியார் நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் எதிர்கால நலனுக்காக, அவர்களின் மாதாந்திர ஊதியத்தில் ஊழியர்களின் பங்களிப்பு, தொழில் தரும் உரிமையாளர் பங்களிப்புடன் வருங்கால வைப்பு நிதி பிடிக்கப்படுகிறது.

தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஒப்பந்த ஊழியர்களின் ஊதியத்தில் பிடித்த தொகையை, அவர்களின் ஓய்வுக்கு பின்போ அல்லது அவர்களுக்கு தேவைப்படும்போதோ முன்பணமாக வழங்குவதற்கான பணிகளையே வருங்கால வைப்பு நிதி அலுவலகங்கள் செய்கின்றன.

தேசிய அளவில் 147 மண்டல வருங்கால வைப்பு நிதி அலுவலகங்கள் ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சக கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இதில், அதிகாரிகள் முதல் அலுவலர்கள் வரை 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர்.

அவற்றில், 2010க்கு முன்பு வரை 'பாக்ஸ் ப்ரோ' மென்பொருள் (சாப்ட்வேர்) பயன்படுத்தபட்டு வந்தது. 2011 முதல், 'ஆரக்கிள் மற்றும் டெவலப்பரால்' தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போதே, 'எச்.பி.- திங்க் கிளைண்ட் டி-5630 டபிள்யூ' எனும் வன்பொருளும், அதனுடன் சேர்ந்த 'எச்.பி.' சர்வரும் புதிதாக பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. தகவல் பரிமாற்றத்திற்காக, அன்றைய தேதியில் புதிதாக சந்தைக்கு வந்த, 100 எம்பிபிஎஸ் வேகம் கொண்ட 'கேட்-5 நெட்வொர்க்' வடங்களும் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. தொழில்நுட்ப வல்லுநர்களின் அறிவுரைப்படி வன்பொருளை (ஹார்ட்வேர்) பொருத்தவரை 'எச்.பி., நிறுவனத்தின் திங்க் கிளைண்ட்' வன்பொருளும், சர்வரை பொருத்தவரை 'ஐபிஎம்' நிறுவன சர்வரும், செயல்பாட்டில் சிறப்பாக இருக்கும் எனக்கூறப்பட்ட நிலையில் ஐபிஎம் சர்வருக்கு பதில், எச்பி சர்வர் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டதற்கு அப்போதே ஆட்சேபனை எழுந்தது. எனினும், எச்பி சர்வர் செயல்பாட்டில் ஓரளவு சிறப்பாக இருந்த நிலையில், 2016ல் அந்த வன்பொருளின் பயன்பாட்டுகாலம் (வாரண்டி) முடிவுற்றதாக, 'எச்.பி' நிறுவனமே அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

உலகளவில் வன்பொருள் ஒன்றின் வாரண்டி காலம் முடிந்ததாக அறிவிக்கப்பட்டால், அதற்கடுத்த நிலையில் உள்ள நவீன வன்பொருளை பயன்படுத்த வேண்டுமென்பதே விதியாக உள்ள நிலையில், 8 ஆண்டுகளாகியும் 2011ல் அறிமுகப்படுத்தப்பட்டு காலாவதியான பழைய வன்பொருள்களாலேயே, வருங்கால வைப்பு நிதி அலுவலகங்கள் செயல்படுகின்றன.

இன்றைய தேதியில் நாடு முழுவதும், 20 சதவீதம் வைப்பு நிதி அலுவலகங்கள் காலவதியான 'எச்.பி. - திங்க் கிளைண்ட் டி-5630 டபிள்யூ' வன்பொருள்களாலேயே இயங்குகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியால் வன்பொருளை பொருத்தவரை, 'எச்.பி.- திங்க் கிளைண்ட் டி-740' வரையும், தகவல் பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப்படும் நெட்வொர்க் வடங்கள், 1000 எம்பிபிஎஸ் வேகம் கொண்ட 'கேட்- 5 மற்றும் 9' வடங்கள் வரையும், இன்றைய சந்தைக்கு வந்துள்ளன.

இவ்வாறு வந்துள்ள வன் மற்றும் மென் பொருள்களை பயன்படுத்தி, வருங்கால வைப்பு நிதி அலுவலகங்கள் நவீனமயமாக்கப்படாததால், தொழில் நிறுவனங்கள், அதன் சந்தாதாரர்கள், ஏற்கனவே ஓய்வூதியம் பெறுவோர், புதிதாக ஓய்வூதியம் பெற உள்ளவர்களுடன், வைப்பு நிதி அலுவலக ஊழியர்களும் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால், நாடு முழுவதும் உள்ள வைப்பு நிதி அலுவலக ஊழியர்கள் நாளொன்றுக்கு லட்சக்கணக்கான மனுக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தீர்வு காண முடியாமல் திண்டாடி வருகின்றனர். ஆண்டுதோறும் ஒவ்வொரு மண்டல அலுவலகத்தில் இருந்தும், அதிகாரிகள் முதல் அலுவலர்கள் வரை 50 முதல் 100 பேர் வரை விருப்ப ஓய்வு பெறுவது, தொடர் மருத்துவ விடுப்பில் செல்வதுமாக உள்ளனர்.

இது, நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திலும், 40 சதவீதத்திற்கும் மேல் ஊழியர்கள் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு, அதிகரிக்கும் காலி பணியிடங்களால் சந்தாதாரர்களுக்கு குறித்த நேரத்திற்குள், தரமான சேவை வழங்க முடியவில்லை. ஒன்றிய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் இதற்கு தீர்வு கண்டால், வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களின் செயல்பாடு மும்மடங்கு அதிகரிக்கும் என சந்தாதாரர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், வைப்பு நிதி அலுவலகங்கள் நவீனமயமானால் அவற்றின் கணக்கு வர்த்தகத்தில் பெரும் பங்கு வகிக்கும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் உரிமையாளர்கள் மாதந்தோறும், 15ம் தேதிக்குள் அவர்களின் கணக்குகளுக்கான பணத்தை ஆன்லைனில் சரியாக செலுத்த முடியும். அதனால், காலதாமதம் காரணமாக, அவர்கள் வட்டி கட்டுவதையும், அவர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தையும் தவிர்க்கலாம்.

ADITYA BIRLA CAPITAL

பாதுகாப்பு முதலீடு நிதி ஆலோசனை

ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வேராவல், குஜராத் 362266
கிளை அலுவலகம்: ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1வது மற்றும் 2வது தளம், ஸ்ரீராம் டவர்ஸ், 739, அவிநாசி சாலை, அண்ணா சிலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018
1. ABHFL: அதிகாரப்பூர்வ அதிகாரி திரு.P.ஜெயபிரகாஷ் (9188422223) ரவி குமார், (7899965229)
2. ஏலம் சேவை வழங்குநர் (ASP):- M/s. இ-புரோக்யூர்மென்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்- (Auctiontiger)

அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

[illegible] 11.01.2023 [illegible] ரூ.1,71,24,397.45/- [illegible] 28.11.2024 [illegible]
[illegible] ரூ.85,00,000/- [illegible] (EMD) [illegible] ரூ.8,50,000/- [illegible] 27.11.2024. [illegible] 28.11.2024 [illegible] 11.00 [illegible] 4.00 [illegible]

அசையாச் சொத்தின் விவரங்கள்

[illegible] 641006 [illegible] 131/2, 132 மற்றும் 146 [illegible] 2631 [illegible] 467 [illegible] 1452 [illegible] 27539.76 [illegible] 63.21 [illegible] 20 [illegible]
விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, [illegible] https://homefinance.adityabirlacapital.com/Properties-For-Auction-Under-sarfaesi-Act அல்லது https://sarfaesi.auctiontiger.net இல் [illegible]

நாள்: 07.11.2024 அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம்: கோயம்புத்தூர் ஆதித்யா பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பிரீத்வி அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் அன்ட் செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிடெட்

PARAS

பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: கதவு எண்: 1-55, ராஜு பிரைசிடு, 4வது தளம், பிளாக்-1, மஞ்சீரா பண்டா சாலை, கொண்டாப்பூர், ஹைதராபாத் – 500084, CIN:U67120TG2007PLC053327 தொலைபேசி: 040-41413333, பேக்ஸ்: 040-41413301, மின்னஞ்சல்: co@paras.org.in, இணையதளம்: www.paras.org.in

அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

[illegible] 31.12.2022 [illegible] ரூ.279,80,29,217/- [illegible] (PARAS) [illegible] "உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ளவாறு" [illegible]

அசையாச் சொத்தின் விவரங்கள்

நிர்ணய விலை: ரூ.4,50,00,000/-	முன்வைப்புத் தொகை: ரூ.45,00,000/-

மனை எண்.38, T.S.No's. 373&374 [illegible] 641011 [illegible] 113862 [illegible] 101826 [illegible] 5525 [illegible] 37 [illegible] 39 [illegible] 4 மற்றும் 5 [illegible]

அதிகாரப்பூர்வ அதிகாரிகள் [illegible] https://www.bankeauctions.com [illegible]

மின்-ஏலம் நாள்	11.12.2024
பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	29.11.2024 காலை 10.00 மணியிலிருந்து பகல் 02.00 மணி வரை
ஏலப்புள்ளி சமர்ப்பிக்க இறுதிநாள்	10.12.2024 [illegible]
மின்-ஏலம் நேரம்	காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
குறைந்தபட்ச ஏல உயர்வுத் தொகை	ரூ.3,00,000/-

[illegible] https://www.bankeauctions.com [illegible] 9948182222, [illegible] tdharani.p@c1india.com & andhra@c1india.com.
[illegible] https://www.bankeauctions.com [illegible] www.paras.org [illegible]
[illegible] RTGS/NEFT [illegible]

கணக்கு எண்.	100631100000229.
கடனீட்டுக் கடனீந்தோர்	பிரீத்வி அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் அன்ட் செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிடெட்
வங்கி	யூனியன் பேங்க் ஆப் இந்தியா
கிளை	[illegible] ஹைதராபாத்
IFSC குறியீடு	UBIN0577901

[illegible] (PARAS), கதவு எண்: 1-55, [illegible] 500084 [illegible]
[illegible] 9652290044, [illegible] 8301102497, [illegible]
[illegible] PARAS [illegible] 2002 [illegible]
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளமான www.paras.org.in/tenders– ஐ பார்க்கவும்.

நாள்:04.11.2024 [illegible] அதிகாரப்பூர்வ அதிகாரி,
இடம்: ஹைதராபாத் M/s. பிரீத்வி அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் அன்ட் செக்யூரிடைசேஷன் கம்பெனி லிமிடெட்

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...

தினகரன் 8904156777

9.30 AM - 6.00 PM